JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **11/2014** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W.3** | Prosecution /Defence / Court | |
| Name | **Suresh Kumar** | Caste | |
| Father's Name | **Sadhasivam** | Calling | |
| Village | **Indira Street** | Religion | |
| Taluk | **Perundurai** | Age | |

(**A**1 - **Mohammed Taj Mydeen is absent**. **Petition U/s**.317 **Cr**.**P**.**C**., **filed and allowed**. **A**2 - **Abdul Bashith is split up from this case**)

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 14.08.2024**

**முதல் விசாரணை**

**1)** நான் மேல்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு பேக்கரி கடை வைத்து நடத்தி வருகிறேன். சாட்சி லோகநாதன் என் கடைக்கு வந்த வகையில் அவரை எனக்கு தெரியும். சாட்சி லோகநாதன் சக்தி ரெஸ்டாரண்ட் என்ற பெயரில் ஓட்டல் வைத்து நடத்தி வருகிறார். கடந்த 30.03.2013 ம் தேதியன்று சாட்சி லோகநாதன் என்னுடைய கடை முன்பு நடந்து வந்தவரை பார்த்து என்னவென்று நான் கேட்டபோது அவரது இருசக்கர வாகனம் அவர் நடத்தி வரும் ஓட்டலுக்கு முன்னர் நிறுத்தி வைத்த நிலையில் காணாமல் போனதாக என்னிடம் அவர் சொன்னார். இது சம்மந்தமாக சாட்சி லோகநாதன் பெருந்துறை காவல் நிலையத்தில் கேஸ் கொடுத்தார். அடுத்த நாள் போலீசார் என்னை இது சம்மந்தமாக விசாரித்தார்கள்.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) சாட்சி லோகநாதனை எனக்கு பல வருடங்களாக தெரியும். தென்வடலாக செல்லும் சென்னிமலை ரோட்டில் லோகநாதன் கிழக்கு பக்கமாக ரெஸ்டாரண்ட் வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த ரெஸ்டாரண்ட் முழுவதுமாக காம்பவுண்ட் அமைக்கப்பட்டு மேற்கு பார்த்துள்ளது என்றால் சரிதான். லோகநாதன் நடந்து வந்ததை நான் பார்த்ததாக சொல்லும் நேரம் இரவு 09.30 மணி இருக்கும் என்றால் சரிதான். அப்பொழுதுதான் வண்டி காணாமல் போனதாக என்னிடம் சொன்னார் என்றும் சொன்னால் சரிதான்.

2) அப்பொழுதே நான், லோகநாதன், சாட்சிகள் கார்த்தி, சரவணன், பாலாஜி, பிரபாகரன், மகேஷ் ஆகியோர்கள் காவல் நிலையம் சென்றோம் என்றால் சரிதான். அன்றைய தினமே காவல் நிலையத்தில் போலீசார் எங்கள் அனைவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் சாட்சி லோகநாதனின் ரெஸ்டாரண்ட்டில் வைத்துதான் விசாரித்தார்கள். அங்கு ரெஸ்ராண்டிற்குள் காம்பவுண்டிற்குள் வைத்துதான் விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

3) நான் பெருந்துறையில் டீக்கடை வைத்துள்ளதால் பெருந்துறை காவல் துறையினர் எனக்கு பழக்கமானவர்கள் என்றால் சரிதான். லோகநாதன் எனக்கு பல வருடங்களாக பழக்கம் என்பதாலும், காவல் துறையினர் எனக்கு பழக்கம் என்பதாலும் காவல் துறையினர் கேட்டுக் கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. லோகநாதன் அவரது வண்டி காணாமல் போனதாக என்னிடம் தகவல் சொல்லி அடுத்த 1/2 மணி நேரத்தில் நாங்கள் காவல் நிலையம் சென்றோம் என்றால் காவல் நிலையம் சென்ற நேரம் எனக்கு நினைவில்லை.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.

4) போலீசார் என்னை 2 மணி நேரம் விசாரித்திருப்பார்கள் என்றால் அவ்வளவு நேரம் விசாரிக்கவில்லை. ஒரு 10 நிமிடம் விசாரித்திருப்பார்கள். லோகநாதன் ஆர்.சி.புக், வண்டி டாக்குமெண்ட் ஆகியவற்றை கையில் கொண்டு வந்திருந்தாரா என்றால் அது எனக்கு ஞாபகமில்லை.

**மறு விசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

(ஒப்பம்)
நீதித்துறை நடுவர்,
பெருந்துறை

நீதித்துறை நடுவர், பெருந்துறை.